<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>

<u>ஜெயங்கொண்டம்.</u>

<u>CC No. 83 /2021</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.நடராஜன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தாகுமரன், மூன்றாம்நிலைஎழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நடராஜன் | வயது | : | 49/26 |
| த.பெ. | : | பெரியசாமி | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | மு.புத்தூர் | நிலை | : | LW05/ PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

(எதிரிஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:</u>

நான் மு.புத்தூரில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். எனது அண்ணி கஸ்தூரியை தாக்கிய வழக்கு சம்மந்தமாக போலீசார் கஸ்தூரி வீட்டிற்கு முன்பு வந்து, வரைபடம் வரைந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள்.என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது அண்ணியின் சொந்த ஊர் முனியங்குறிச்சி என்றால் சரிதான். எனது ஊர் புத்தூர் என்றால் சரிதான். எனது அண்ணி

வாங்கிய இடத்தை சரியாக அளந்து வாங்காததால்தான் பிரச்சனை என்றால் இல்லை, வாங்கிய மனைக்கட்டில் அத்து பிரச்சனை ஆகும். அது சம்மந்தமாக என் அண்ணி சிவில் வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான்.

2) போலீசார் என்னிடம் எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் எனது அண்ணி வீட்டிற்கு முன்பு வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் போலீசார் வந்து ஒரு எழுதப்படாத வெற்று பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கி சென்றார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 என் அண்ணி என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/
ஒம்/−P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.